


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




ஞாயிறு ❖ ஜீன். 11, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 247 ❖ ரூ.10

## சென்னை உயர் நீதிமன்றத்தில் - மாற்றம் இந்தியா அமைப்பின் வழக்கு

# தகவல்

## பல்கலைக்கழக துணை வேந்தர் நியமன நடைமுறைக்கு கால நிர்ணயம் செய்து சட்டம் இயற்றப்பட்டுள்ளது :தமிழக அரசு

**சென்னை, ஜூன். 11-**
**பல்கலைக்கழக துணை வேந்தர்கள் நியமன நடைமுறைக்கு கால நிர்ணயம் செய்து சட்டம் இயற்றப்பட்டுள்ளதாக தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தகவல் தெரிவித்துள்ளது.**



சென்னை உயர் நீதிமன்றத்தில், மாற்றம் இந்தியா அமைப்பின் சார்பில், தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்கள் நியமனத்துக்கு கால நிர்ணயம் செய்து விதிமுறைகள் வகுக்க உத்தரவிடக்கோரி வழக்கு தொடரப்பட்டிருந்தது.

கடந்த 2017-ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட அந்த மனுவில், "பல்கலைக்கழக மாணவர்களின் நலனை பாதுகாக்க வேண்டும். பல்கலைக்கழக செயல்பாடுகளில் இடையூறு ஏற்படாமலும் தடுக்க வேண்டும். இதற்காக, துணை வேந்தர்கள் நியமன நடைமுறைகளை உடனுக்குடன் முடிக்கும் வகையில் கால நிர்ணயம் செய்து விதிமுறைகளை வகுக்க வேண்டும்" என மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் தமிழக அரசு பதில்மனு தாக்கல் செய்திருந்தது. அதில், "துணை வேந்தர்கள் தேர்வு நடைமுறைகளை எப்போது துவங்குவது, எப்போது முடிப்பது என்பது குறித்து கால நிர்ணயம்செய்துதமிழ்நாடு பல்கலைக்கழகத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி கங்கபுர்வாலா மற்றும் நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு பிளீடர் முத்துகுமார் ஆஜராகி, "கடந்த ஆண்டு, தமிழ்நாடு பல்கலைக்கழக சட்டம், சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார். இதைப் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

## பாஜக ஆட்சியில் தமிழகத்துக்கு செய்த திட்டங்களை அமித்ஷா பட்டியலிட வேண்டும்

### முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தல்

**சேலம் , ஜூன். 11-**
**"கடந்த ஒன்பது ஆண்டு கால பாஜக ஆட்சியில் தமிழகத்துக்கு செய்த திட்டங்களை சென்னை வரும் உள்துறை அமைச்சர் அமித் ஷா பட்டியலிட்டு தெரிவிக்க வேண்டும் என தமிழக மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்" என்று சேலத்தில் நடந்த திமுக செயல் வீரர்கள் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசினார்.**



சேலம், ஐந்து ரோட்டில் நேற்று நடந்த திமுக செயல் வீரர்கள் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமை வகித்து பேசியது: "இந்த சேலம் மண்ணில் தான் திராவிட இயக்கம் உருவானது. கடந்த 1997ம் ஆண்டு சேலத்தில் நடந்த திமுக மாநாட்டில் இளைஞர் அணிக்கு தலைமை ஏற்றதும்; 2004-ம் ஆண்டு நடந்த மாநாட்டில் 54 அடி உயர கட்சி கம்பத்தில் கொடியேற்றியதை எண்ணி பெருமை கொள்கிறேன்.

முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டை ஆண்டு முழுவதும் ஊர்கள் தோறும் கொண்டாடும் விதமாக 'எங்கேயும் கலைஞர்' தலைப்பில் கவியரங்கம், பட்டிமன்றம், மார்பளவு சிலை திறப்பு, கட்சி கொடி கம்பம், குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கி நிர்வாகிகள் செயலாற்றிட வேண்டும். கட்சியில் உழைக்கும் கழகத்தினருக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படும். தொண்டர்களின் பிரச்சினைகளை காதுகொடுத்து கேட்டு, நிவர்த்தி செய்திட நிர்வாகிகள் முன் வரவேண்டும். சேலம் செயல் வீரர்கள் கூட்டமானது, வரும் நாடாளுமன்றத்துக்கு அச்சாரமிடும் கூட்டமாகும் என்பதை மறந்துவிடக்கூடாது.

தமிழகத்தில் பத்தாண்டாக அதிமுக ஆட்சி நடத்தி பாழ்படுத்தியது. மக்கள் அதிமுகவை அகற்றி விட்டு, நம்மை நம்பி ஆட்சியை ஒப்படைத்துள்ளனர். திமுக ஆட்சி பொறுப்பேற்றதும் பெண்களுக்கு இலவச பேருந்து பயணம் முதல் எண்ணற்ற பல நூறு திட்டங்களை செயல்படுத்தி, மக்கள் நன்மதிப்பை பெற்றுள்ளோம். ஆட்சிக்கு வந்ததும் கட்சி வளர்ச்சி பாதை நோக்கி பயணமாகி வருகிறது. இதன் பயனாக திமுக-வில் 2 கோடி உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

'ஒரு புறம் கட்சி வளர்ச்சியும்; மறுபுறம் மாநில வளர்ச்சியையும்' இரு கண்களாக கொண்டே செயலாற்றி வருகிறேன். இனி எந்த காலத்திலும் திமுக ஆட்சியை, எந்த சக்தியாளும் வீழ்த்த முடியாத அளவுக்கு கழகத்தை கட்டமைத்து எழுப்பியுள்ளேன். நாம் நாடாளுமன்ற தேர்தலுக்கு தயாராக வேண்டிய தருணம் வந்துவிட்டது. மத்திய அரசு முன் கூட்டியே நாடாளுமன்ற தேர்தலை நடத்த திட்டமிட்டாலும், அதனை சந்திக்க நாம் தயாராக இருக்க வேண்டும். கடந்த ஒன்பது ஆண்டு கால பாஜக ஆட்சியில் தமிழகத்துக்கு செய்த திட்டங்களை சென்னை வரும் உள்துறை அமைச்சர் அமித்ஷா பட்டியலிட்டு தெரிவிக்க வேண்டும் என தமிழக மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். மத்தியில் ஆட்சி வகித்த காங்கிரஸ் உடன் திமுக கூட்டணி கொண்டிருந்த போது, மெட்ரோ ரயில் திட்டம் உள்பட 619 திட்டங்கள் கொண்டு வந்து, 80 சதவீத பணி நிறைவேற்றப்பட்டது.

சசிகலா காலை வாரி, பாஜகவுக்கு பல்லாக்கு தூக்கி ஆட்சியை பிடித்த அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, ஜெயலலிதா, மறைவுக்கு பிறகு சந்தித்தெல்லாம் தோல்வி முகமே தவிரே வேறேதுமில்லை. அண்ணாபிறந்த நாள் விழாவில் பெண்களுக்கான உரிமை தொகை ரூ.ஆயிரம் வழங்கப்படும். கழகசெயல்வீரர்கள் அரசின் திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும். இதற்காகசமூகவலைதளங்களை பயன்படுத்தி, எதிர் அணியினர் தரும் பொய் தகவலை முறியடித்து, திமுக ஆட்சியில் மக்கள் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

'நாடும் நமதே; நாடளுமன்ற தேர்தலில் 40 தொகுதியும் நமதே' என்ற முழக்கத்துடன் கழக செயல் வீரர்கள் கட்சி பணியாற்றி வெற்றிக்கு வித்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்" என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார். இதில் பொதுப் பணித்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிருவாக துறை அமைச்சர் கே.என்.நேரு, சேலம் மாநகர மாவட்ட செயலாளர் ராஜேந்திரன், மேற்கு மாவட்ட செயலாளர் செல்வகணபதி, கிழக்கு மாவட்ட செயலாளர் சிவலிங்கள் உள்பட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**முதல்வர் சொன்ன குட்டி கதை:** முதல்வர் ஸ்டாலின் கூட்டத்தில் பேசும் போது, "அதிமுக - பாஜக கூட்டணியானது கரடி பிடித்த கதையாக உள்ளது. ஒரு ஊரில் கடும் வெள்ளம் அடித்து சென்றது, வெள்ளத்தில் பல பொருட்களும் மிதந்து சென்றது. இரு கரையிலும் இருந்த மக்கள் வெள்ளத்தில் அடித்து சென்ற பொருளை எடுக்க போட்டி போட்டனர். அப்போது, கரையில் நின்றிருந்த ஒருவர், வெள்ளத்தில் கருப்பாகவும், பெரிதாகவும் மிதந்து வந்த பொருள் மீது ஆசைப்பட்டு, அதனை எடுக்க ஆர்வப்பட்டது மில்லாமல், அந்த கருத்த, பெருத்த பொருளை கைப்பறினார். அவர் கைப்பற்றிய அந்த பொருளானது கரடி என்பதை அறிந்த அந்த நபர் அதனை விட்டு விலகிடலாம் என்றாலும், அந்த கரடியானது விடாப்பிடியாக அவரை பிடித்துக் கொண்டுள்ளது. இவ்வாறு தான் அதிமுக-பாஜக கூட்டணியானது தமிழகத்தில் உள்ளது," என்றார்.

## திரைப்படங்கள் ஆரோக்கியமான சிந்தனைகளைத் தூண்ட வேண்டும் திரைப்பட விழாவை தொடங்கி வைத்து உ.வாசுகி பேச்சு

**புதுக்கோட்டை, ஜூன்.11-**
திரைப்படங்கள் ஆரோக்கியமான விவாதங்களையும், சிந்தனைகளையும் தூண்ட வேண்டும் என்றார் ஜனநாயக மாதர் சங்கத்தின் அகில இந்திய துணைத் தலைவர் உ.வாசுகி.



இந்திய மாணவர் சங்கமும், இந்திய ஜனநாயக மாதர் சங்கமும் இணைந்து உலக திரைப்பட விழாவை ஜூன் 10, 11 தேதிகளில் புதுக்கோட்டையில் நடத்தி வருகிறது. திரைப்பட விழாவை தொடங்கி வைத்து உ.வாசுகி பேசியதாவது, 1895-ஆம் ஆண்டு லூமியர் சகோதர்கள் பாரிஸ் நகரில் முதன்முதலாக ஓடும் படத்தை வெளியிட்டனர். தற்பொழுதுள்ள தொழில்நுட்பத்தில் திரைப்படங்கள் மிகப்பிரம்மாண்டமான வளர்ச்சியை பெற்றுள்ளன.

இந்நிலையில், இந்திய மாணவர் சங்கம், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் போன்ற அமைப்புகள் இதுபோன்ற உலகத் திரைப்பட விழாக்களை நடத்திவருவது மிகுந்த பாராட்டுக்கு உரியது. நாம் தேடினாலும் கிடைக்காத உலகலாவிய பல தரமான படங்கள் தம்மை தேடி வந்திருக்கிறது. நல்ல படங்கள் நமது பல்வேறு கேள்விகளுக்கு விடைகளைத் தேடித்தரும். சோர்வுற்று இருக்கும் நேரங்களில் புத்துணர்ச்சி அளிக்கும், சாத்தியமானதல்ல என்று நாம் ஒதுக்கிய விசயங்களை சாத்தியப்படுத்தும், இந்தத் திரைப்பட விழாவை மாணவர்களும், இளைஞர்களும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

தொடக்க விழாவுக்கு மாணவர் சங்க மாவட்டத் தலைவர் ஏ.சந்தோஷ்குமார் தலைமை வகித்தார், தமுஎகச திரை இயக்க ஒருங்கிணைப்பாளர் களப்பிரன் திரைப்பட விழாவின் நோக்கத்தை விளக்கிப் பேசினார். திரைப்படங்கள் குறித்து திரைத்துறை பேராசிரியர் எம்.சிவக்குமார் பேசினார், வாலிபர் சங்க மாநிலத் தலைவர் கார்த்திக், மாணவர் சங்க மாநில துணைத் தலைவர் தௌ.சம்சீர் அகமது, சிபிஎம் மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன், தமுஎகச நிர்வாகிகள் ஜீவி, ராசி. பன்னீர்செல்வன், எம். ஸ்டாலின் சரவணன், கி.ஜெயபாலன், மு.கீதா, புதுகைபிலிம்சொசைட்டி தலைவர் எஸ். இளங்கோ, திரைப்படப் பாடலாசிரியர் இரா.தனிக்கொடி, புதுக்கோட்டை மாவட்ட பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சு.மதியழகன் உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர்.

முன்னதாக வாலிபர் சங்க மாவட்டச் செயலாளர் ஆ.குமாரவேல் வரவேற்க, மாணவர் சங்க நகரத் தலைவர் எம்.மகாலெட்சுமி நன்றி கூறினார், ஏ.பாலாஜி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

## தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழக மாணவர்கள் பங்கேற்க இயலாமல் போன விவகாரம்

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விளக்கம்

**சென்னை , ஜூன். 11-**
தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழக மாணவர்கள் பங்கேற்க முடியாதது தொடர்பாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.



நாடு முழுவதும் அரசு, தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு தேசிய அளவில் கிரிக்கெட், டென்னிஸ், நீச்சல், கேரம், சதுரங்கம், ஹாக்கி, கபடி உள்ளிட்ட 32 விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

இவற்றில் மாநில அளவிலான போட்டிகளில் தகுதி பெற்றவர்களை தேசிய போட்டிகளுக்கு அந்தந்த மாநில அரசுகள் தேர்வு செய்து அனுப்புகின்றன. இந்தப் போட்டிகளில் பங்கேற்கும் மற்றும் வெற்றி பெறும் மாணவர்களுக்கு உயர்கல்வி சேர்க்கையில் முன்னுரிமை உட்பட பல்வேறு சலுகை வழங்கப்படுகிறது.

அதன்படி, இந்த ஆண்டு தேசிய போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்றவர்களின் விவரங்களை மே 29-ம் தேதிக்குள் இணையவழியில் பதிவு செய்ய தேசிய விளையாட்டு கூட்டமைப்பு சார்பில் தமிழக பள்ளிக்கல்வித் துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டதாக கூறப்படுகிறது.

ஆனால், தமிழகத்தில் இருந்து மாணவர்களைத் தேர்வு செய்து அனுப்ப பள்ளிக்கல்வித்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், இதனால் சுமார் 250-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் இதற்கு கல்வித்துறை அதிகாரிகளின் அலட்சியமே காரணம் என்றும் குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பான கேள்விக்கு சென்னையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதில் அளித்தார். அப்போது பேசிய அவர்," இது தொடர்பாக தீவிர விசாரணை நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முறையாக தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் இது நடந்துள்ளது. இனி வரும் காலங்களில் இது போன்று நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும். " இவ்வாறு அவர் கூறினார்.



▸ புதுக்கோட்டை கிரவுண்ட் சிட்டி ரோட்டரி சங்கம் பென்ச் மார்க் மெடிக்கல் டிரஸ்ட் இணைந்து நடத்திய மாபெரும் இலவச மருத்துவ முகாம் கிங்டவுன் ரோட்டரி ஹாலில் நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் டாக்டர் சுனில் தலைமையிலான மருத்துவ குழுவினர் சிறப்பாக மருத்துவ பரிசோதனை மேற்க்கொண்டு சமூக பங்காற்றினர். நிகழ்ச்சிக்கு திட்ட இயக்குனர் லியோ, துணை ஆளுநர் முருகராஜ், சங்கத்தின் தலைவர் செந்தில் கனேஷ், செயலாளர் செந்தில், பொருளாளர் தங்கதுரை உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இன்று

# 11-6-2023

அஷ்டமி

பூவரசு இலை அரைத்து வதக்கி கட்டினால் வீக்கம் குறையும்
சக வருடம் 1945 ஜ்யேஷ்டம் 21

| | | | |
|---|---|---|---|
| சோபகிருது வைகாசி 28 | JUN - SUN ஞாயிறு | துல்கஃதா 21 | இராசிபலன் |
| | | தேய்பிறை 162 / 203 | |

தேய். அஷ்டமி 25.15 (மா. 03.58) பூரட்டாதி 31.02 (மா. 06.17) தியாஜ் 53.58 அகஸ் 31.28 சித்த 31.02 மேல் அமிர்த. கீழ்திருப்பதி கோவிந்தராஜப் பெருமாள் சன்னதி எதிரில் ஹனுமாருக்கு திருமஞ்சன சேவை. கண்ணூறு கழித்தல், சூரிய வழிபாடு ஆரோக்கிய ஸ்நானம் செய்ய நன்று. சிறிய நகக.

| | நல்லநேரம் | கௌ.த.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 10.30-11.30 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை | 3.30-4.30 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்
ரிஷப லக்னம் இருப்பு நா. 0 வி. 45
சந்திராஷ்டமம் ஆயில்யம் மகம்
கரணம் : 10.30-12; சூரிய உதயம் : 5.52

இளைத்தவன் சோல் கொழுத்தவன் காது எட்டாது

இராசிபலன்:
மேஷம் - சுகம்
ரிஷபம் - நட்பு
மிதுனம் - நலம்
கடகம் - ஊக்கம்
சிம்மம் - கவலை
கன்னி - ஆர்வம்
துலாம் - முயற்சி
விருச்சி - கவனம்
தனுசு - செலவு
மகரம் - பொறுமை
கும்பம் - பக்தி
மீனம் - லாபம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# நடுத்தர மக்களின் வாழ்க்கையை எளிதாக்க அரசு தொடர்ந்து பாடுபடுகிறது பிரதமர் மோடி

புதுடெல்லி ,ஜுன்.11–



நடுத்தர மக்களின் வாழ்க்கையை அதிக அளவில் எளிதாக்க மத்திய அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "வளர்ச்சி மற்றும் புதுமைகளுக்கான பங்களிப்பில் நடுத்தர வருவாய் பிரிவினர் முன்னணியில் உள்ளனர். புதிய இந்தியா உருவாகி வருவதை தங்களின் கடின உழைப்பின் மூலம் அவர்கள் உணர்த்தி வருகின்றனர். நடுத்தர வருவாய் பிரிவினரின் வாழ்க்கையை அதிக அளவில் எளிதாக்க மத்திய அரசு தொடர்ச்சியாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் தொழில்நுட்பப் பயன்பாடு, பிரதமரின் வீடு கட்டும் திட்டம், சிறு நகரங்களிலும் உருவாகி உள்ள விமான நிலையங்கள், ஜிஎஸ்டி மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ள விலைவாசி உயர்வு உள்ளிட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்த கட்டுரைகளையும் பிரதமர் மோடி தனது ட்விட்டர் பக்கத்தில் இணைத்துள்ளார்.

கடந்த 9 ஆண்டுகளில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு, நடுத்தர வருவாய் பிரிவினரின் கனவுகளை நிறைவேற்றி இருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், "நடுத்தர மக்களின் விருப்பங்களை உணர்ந்த அரசாக கடந்த 9 ஆண்டுகால நரேந்திர மோடி அரசு உள்ளது. நடுத்தர மக்களின் குழந்தைகள் கல்வியில் மேம்படுவதை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள புதிய கல்வி நிறுவனங்களாக இருந்தாலும், மானியத்துடன் வீடு வழங்குவதாக இருந்தாலும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதாக இருந்தாலும் நரேந்திர மோடி, அவர்களின் கனவுகளை நிறைவேற்றி உள்ளார்" என தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், "ஆண்டு வருவாய் ரூ. 7 லட்சம் வரை உள்ளவர்களுக்கு வருமான வரி விலக்கு அளித்திருப்பது, மக்கள் மருந்தகம் மூலம் கட்டுப்படியான விலையில் மருந்துப் பொருட்கள் விற்கப்படுவது, சிறு வியாபாரிகளை ஒருங்கிணைக்கும் உதான் திட்டம் ஆகியவை நடுத்தர மக்களுக்கு மிகப் பெரிய பயன்களை அளித்துள்ளது" என்றும் தெரிவித்துள்ளார்.

# தேசியவாத காங்கிரஸ் துணைத் தலைவராக சரத் பவார் மகள் சுப்ரியா சுலே நியமனம்

மும்பை ,ஜுன்.11–



தேசியவாத காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராக சுப்ரியா சுலே நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசியவாத காங்கிரஸ் கட்சியில் கடந்த சில மாதங்களாக உள்கட்சி அரசியல் தீவிரமடைந்து காணப்பட்டது. கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் கட்சித் தலைவர் சரத் பவாரின் அண்ணன் மகனுமான அஜித் பவார், தனது ஆதரவு எம்எல்ஏக்களின் கூட்டத்தைக் கூட்டியதால் சர்ச்சை எழுந்தது. கட்சிக்குள் கிளர்ச்சியை ஏற்படுத்தி தலைமைப் பொறுப்பை தன் வசப்படுத்த அஜித் பவார் மேற்கொண்ட முயற்சியாக அது பார்க்கப்பட்டது.

இந்த விவகாரத்தின் பின்னணியில், கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்வதாக சரத் பவார் சில வாரங்களுக்கு முன்பு அறிவித்தார். சரத் பவாரின் இந்த அறிவிப்பை ஏற்க மறுத்த கட்சியின் நிர்வாகிகளும், தொண்டர்களும் அவரே தொடர்ந்து தலைவர் பதவியில் நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். இந்த வலியுறுத்தலை அடுத்து தலைவர் பதவியில் நீடிப்பதாக சரத் பவார் தெரிவித்தார்.

இந்நிலையில், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் 25ம் ஆண்டை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் கட்சியின் துணைத் தலைவராக தனது மகளான சுப்ரியா சுலேவை சரத் பவார் நியமித்துள்ளார். மற்றொரு துணைத் தலைவராக பிரபுல் படேல் நியமிக்கப்பட்டுள்ளார். அஜித் பவாரின் முன்னணியில் இருவருக்கும் இந்த பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2006-ம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுப்ரியா சுலே, 2009-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலின்போது தனது தந்தையின் தொகுதியான பாரமதி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தேசியவாத காங்கிரஸ் கட்சிக்குள் தேசியவாத இளம்பெண்கள் காங்கிரஸ் எனும் மகளிர் அணியை சுப்ரியா சுலே உருவாக்கினார். கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவராக வளர்ந்த சுப்ரியா சுலே, மாவட்டம்தோறும் சுற்றுப் பயணம் செய்து கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார்.






▶ அரியலூர் மாவட்டம், செந்துறை அருகே, இலைக்கடம்பூர் கிராமத்தில், பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்டச் செயலாளர் உலக சாமிதுரை, செந்துறை யூனியன் சேர்மன் தேன்மொழி ஆகியோரால் கட்டப்பட்ட, புதிய வீடு கிரகப்பிரவேச விழாவில் பங்கேற்க வந்த, பாமக மாநிலத் தலைவர் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் அன்புமணி ராமதாஸுக்கு, உலக சாமிதுரை- தேன்மொழி தம்பதியினர், பூக்கூடை கொடுத்து வரவேற்றனர்.

# ஆளுநர்களை அரசியல் கருவிகளாகப் பயன்படுத்துவது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல ரவிக்குமார் எம்.பி

புதுச்சேரி ,ஜுன்.11–



"ஆளுநர் என்பவர் தனிப்பட்ட நபரல்ல; அவர் மத்திய அரசால் எய்யப்படும் அம்புதான்" என்று விழுப்புரம் ரவிக்குமார் எம்.பி விமர்சித்துள்ளார்.

புதுச்சேரி மாநில காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக வைத்திலிங்கம் எம்பி நியமிக்கப்படவுள்ளார். இந்நிலையில், அவரை புதுச்சேரியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளரும், விழுப்புரம் எம்.பியுமான ரவிக்குமார் நேற்று நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "கர்நாடகாவில் எந்தக் கட்சியின் ஆட்சி அமைந்தாலும் மேகேதாட்டுவில் அணை கட்டப்படும் என்றே கூறி வருகின்றனர். ஆனால், அணையைக் கட்டமுடியாது என்பதுதான் உண்மையான நிலையாகும்.

காவிரி அணை விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு தமிழகத்துக்கு சாதகமாகவே உள்ளது. தமிழகத்திலும் காவிரி பிரச்சினையை முழுமையாக அறிந்த மூத்த அமைச்சர் துரைமுருகன் உள்ளார். ஆகவே, அணை விவகாரத்தில் அரசு முழுமையாக நமது உரிமையை காக்கும் வகையில் செயல்படுகிறது.

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி ஆளும் திமுகவினால் நேரடியாக விமரிசிக்கப்பட்டுள்ளார். ஆளுநர் என்பவர் தனிப்பட்ட நபரல்ல. அவர் மத்திய அரசால் எய்யப்படும் அம்புதான். அவரது செயல்பாட்டுக்கு மத்திய அரசே காரணமாகிறது. ஆதலால் எய்தவர் இருக்க அம்பை நொந்து பயன் கிடையாது.

புதுச்சேரியில்துணைநிலை ஆளுநர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை மதிக்காமல் செயல்படுகிறார். ஆகவேதான் மத்திய அரசு ஆளுநர்களை அரசியல்வாதிகளைப் போல கருவிகளாகப் பயன்படுத்துகிறது என்கிறோம்.

அரசியல் சாசனப்படி செயல்படும் தேர்தல் ஆணையம் உள்ளிட்டவற்றின் தனித்தன்மையை அழித்துவிட்டு மத்திய அரசு பயன்படுத்தும் கருவியாக அவற்றை மாற்றுவது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல" என்றார்.

## அறந்தாங்கியில் அனுமதியின்றி இயங்கி வரும்

# தனியார் பாரை மூடவும், கஞ்சா விற்பனையை தடுக்கவும் கிராம மக்கள் சாலை மறியல்

அறந்தாங்கி,ஜுன்.11–



அறந்தாங்கி பகுதிகளில் முறையான அனுமதியின்றி இயங்கி வரும் தனியார் பாரை மூட வேண்டியும், கட்டுக்கடங்காமல் புழக்கத்தில் இருக்கும் கஞ்சா விற்பனையை கண்டுகொள்ளாத காவல்துறையை கண்டித்தும், கஞ்சா போதையினால் அராஜகத்தில் ஈடுபடுபவர்களை கைது செய்ய வேண்டியும் 100-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட துரையரசபுரத்தில் தமிழக அரசுக்கு சொந்தமான மதுபான கடை ஒன்று இயங்கி வருகிறது.இந்த மதுபான கடைக்கு அருகே தமிழக அரசின் உரிமம் இல்லாத தனியார் பார் ஒன்று இயங்கி வருவதாகவும், அந்த பாரில் 24-மணி நேரமும் மது விற்பனை படுஜோராக நடந்து வருவதாகவும், அந்த மதுபான கடை மற்றும் தனியார் பாரானது பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதியில் இருந்து சுமார் 300-மீட்டர் தொலைவில் இருப்பதால் அதனை அகற்ற வேண்டி துரையரசபுரம் கிராம மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வந்துள்ளனர்.

இந்நிலையில் துரையரசபுரம் பகுதியில் கடந்த சில மாதங்களாக கஞ்சா விற்பனையானது கட்டுக்கடங்காமல் நடப்பதாகவும், கஞ்சாவை புகைப்பவர்கள் அந்த போதையில் அப்பகுதி பெண்களிடம் அத்துமீறி நடப்பதாகவும்,வழிப்பறி மற்றும் கொள்ளை போன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாகவும் தமிழக அரசின் காவல்துறையிடம் பலமுறை புகார் அளித்ததாக தெரிவிக்கின்றனர். ஆனால் அந்த புகார் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் காவல்துறையினர் காலம் தாழ்த்தி வருவதாகவும் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்நிலையில் தங்கள் பகுதியை சேர்ந்த இரண்டு வாலிபர்களை கஞ்சா போதையில் இருந்த 10-க்கும் மேற்பட்ட நபர்கள் சேர்ந்து தாக்கி அவர்கள் வைத்திருந்த பணம் மற்றும் நகைகளை பறித்து சென்றதாகவும் அது குறித்து காவல்துறையில் புகார் அளித்த நிலையில் ஒருநபரை மட்டும் கண்துடைப்பிற்காக கைது செய்து மற்றவர்களை கைது செய்யாமல் இருந்ததை கண்டித்து துரையரசபுரம் கிராம மக்கள் சுமார் 100-பேருக்கும் மேற்பட்டோர் இன்று காலை ஆவுடையார்கோவில்-அறந்தாங்கி சாலையில் அமர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த அறந்தாங்கிதுணைகாவல் கண்காணிப்பாளர் மற்றும் ஆவுடையார் கோவில் காவல்துறையினர் கிராம மக்களிடம் குற்றவாளிகளை விரைந்து கைது செய்வதாக உறுதி அளித்ததை அடுத்து போராட்டமானது தற்காலிகமாக கைவிடப்பட்டது..



▶ புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து சிறப்பு மருத்துவர்கள் குழுவானது மாதம் இரண்டு சனிக்கிழமைகளில் காரைக்காலுக்கு வருகை புரிந்து அரசு பொது மருத்துவமனையில் காரைக்கால் வாழ் பொதுமக்களுக்கு சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி வரும் நிலையில் நேற்று காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை இதயவியல் மற்றும் இதய நுரையீரல் அறுவை சிகிச்சை சம்பந்தமான பிரச்சனைகள் குறித்து சிறப்பு மருத்துவ நிபுணர்கள் வருகை புரிந்து காரைக்கால் வாழ் பொதுமக்களுக்கு சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்கள். இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள்.

# அரியலூரில் ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

அரியலூர், ஜூன்.11–



அரியலூரில் ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அரியலூர் அருகே, அல்லிநகரம் கிராமத்தை சேர்ந்த அபிநயா என்கிற இளம் பெண், கொடூரமாக கொலை செய்யப்பட்டதற்கு நீதி மற்றும் நிவாரணமாக குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கேட்டு, அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் அரியலூர் தாலுகா அலுவலகம் எதிரே நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் அம்பிகா தலைமை வகித்தார். பாரதிதாசன், சிவாஜி கணேசன், சி ஐ டி யு மாவட்டச் செயலாளர் துரைசாமி, மாவட்டத் தலைவர் கிருஷ்ணன், துணைத் தலைவர் சிற்றம்பலம், சந்தானம், மணிவேல், மலர்க்கொடி, இளங்கோவன், உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் மாநில துணைச் செயலாளர் எஸ். கீதா, தமிழ் பேரரசு கட்சியின் திருச்சி மண்டலச் செயலாளர் முடிமன்னன் உள்ளிட்டோர், கண்டன உரையாற்றிய இக்கூட்டத்தில், சீனி அறிவுமழை, மகாதேவன், கலைமணி, வீரமுத்து, தமிழ் பேரரசு கட்சியின் மாவட்டத் தலைவர் ரகுபதி, பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் அன்பு, மாவட்டத் தலைவர் அசோக், திருச்சி மண்டல செயலாளர் ராஜேந்திரன், மாவட்ட அவைத் தலைவர் மாரிமுத்து, மாவட்ட இலக்கிய அணி செயலாளர் கவிஞர் பழனிச்சாமி, நிர்வாகிகள் செல்லதுரை, ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# விளம்பரத்துக்காக இப்படிச் செய்வதா ? நடிகை கஜோலை விமர்சிக்கும் நெட்டிசன்கள்

மும்பை ,ஜுன்.11–



டிஸ்னி ப்ளஸ் ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் புதிய வெப் சீரிஸ் ஒன்றின் விளம்பரத்துக்காக நடிகை கஜோல் முன்னெடுத்த செயல், நெட்டிசன்களிடையே விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. இதையடுத்து #ShameOnKajolHotstar என்ற ஹேஷ்டேக் ட்விட்டரில் ட்ரெண்டாகி வருகிறது.

பிரபல இந்தி நடிகை கஜோல். இவர் தமிழில் ராஜீவ்மேனன் இயக்கிய 'மின்சாரக் கனவு' படத்தில் நடித்திருந்தார். தனுஷ் நடிப்பில் 2017-ம் ஆண்டு வெளியான 'வேலையில்லா பட்டதாரி 2' படத்தில் நெகட்டிவ் கேரக்டரில் நடித்திருந்தார். இப்போது, நெட்ஃபிளிக்ஸில் வெளியாக இருக்கும் 'லஸ்ட் ஸ்டோரீஸ் 2' தொடரில் நடித்துள்ளார். இந்தத் தொடர் வரும் 15-ம் தேதி வெளியாக இருக்கிறது.

இதனிடையே நடிகை கஜோல் வெள்ளிக்கிழமை தனது ட்விட்டர் பக்கத்தில், சமூக வலைதளங்களில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்தார். இது குறித்து அவர் ட்விட்டரில், "வாழ்வின் கடினமான சோதனைகளில் ஒன்றை எதிர்கொள்கிறேன்" என்று கூறியிருந்தார். குறிப்பாக அவர், ' toughest trials' என்ற வார்த்தையை பயன்படுத்தியிருந்தார். அவரது அந்த பதிவுக்கு ரசிகர்கள் பலரும் 'நம்பிக்கையை தளரவிட வேண்டாம்' உள்ளிட்ட வார்த்தைகளால் ஆறுதல் கூறியிருந்தனர்.

இந்நிலையில், நடிகை கஜோல் தான் நடிக்கும் புதிய வெப் சீரிஸ் ஒன்றுக்காக இதுபோன்ற பதிவை பதிவிட்டிருப்பது தெரியவந்துள்ளது. கஜோல் நடித்துள்ள 'தி ட்ரையல்' (The trial) என்ற இந்த வெப் சீரிஸ் ஜுன் 12-ம் தேதி திங்கள்கிழமை டிஸ்னி ப்ளஸ் ஹாட்ஸ்டார் ஓடிடியில் வெளியாகிறது.

இந்த வெப் தொடரின் விளம்பரத்தின் ஒருபகுதியாக அவர் நேற்று ட்விட்டரில் 'வாழ்வின் கடினமான சோதனையை எதிர்கொள்கிறேன்' என பதிவிட்டிருந்திருந்தார். 'விளம்பரத்துக்காக இப்படியா செய்வது?' என விமர்சித்து வரும் நெட்டிசன்கள் ட்விட்டரில் ' #ShameOnKajol-Hotstar' என்ற ஹேஷ்டேக்கை ட்ரெண்டாக்கி வருகின்றனர். "அடுத்த முறை கஜோல் உண்மையாகவே பதிவை வெளியிட்டாலும் யாரும் நம்ப போவதில்லை" என்று கூறி கடுமையாக சாடி வருகின்றனர்.

நெட்டிசன் ஒருவர், "மிகுந்த மரியாதை வைத்திருந்தேன். ரசிகர்களை அவர் மதிப்பதில்லை என்பது தெளிவாகியுள்ளது" என பதிவிட்டுள்ளார்.

மற்றொருவர், "கீழ்த்தரமான விளம்பர யுக்தி அவர் மீதான மரியாதையை சீர்குலைத்துள்ளது" என பதிவிட்டுள்ளார். "ரசிகர்களை விட வணிகத்துக்கு முன்னுரிமை கொடுப்பது உறுதியாகியுள்ளது. கஜோல் மீதான மரியாதை சிதைந்துவிட்டது" என நெட்டிசன் ஒருவர் பதிவிட்டுள்ளார்.

# எடக்குடி ஊராட்சியில் வட்ட வழங்கல் துறை மக்கள் குறைதீர் முகாம்




**தரங்கம்பாடி, ஜூன். 11:** மயிலாடுதுறை மாவட்டம் பெரம்பூர் அருகே எடக்குடி ஊராட்சியில் தரங்கம்பாடி தாலுகா வட்ட வழங்கல் துறை சார்பில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை மக்கள் குறைதீர் முகாம் சனிக்கிழமை நடைபெற்றது

முகாமுக்கு தரங்கம்பாடி வட்ட வழங்கல் அலுவலர் வெ.விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற முகாமில். ஊராட்சிமன்ற தலைவர் விஜயா தங்கமணி முன்னிலை வகித்தார். வட்ட வழங்கல் துறை தனி வருவாய் அலுவலர் மரிய ஜோசப்ராஜ் வரவேற்றார்.

இதில் ரேஷன் கார்டு பெயர் மாற்றம், பிழை திருத்தம், முகவரி மாற்றம், செல்போன் எண் மாற்றம் உள்ளிட்டவை தொடர்பாக 41 மனுக்கள் மீதான தீர்வு காணப்பட்டது. முகாமில் அங்காடி விற்பனையாளர் மதிவதனன், வார்டு உறுப்பினர் நித்தியா ஜெகன் மற்றும் உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# ராயபுரம் போக்குவரத்து காவலர்கள் சார்பில் பைக்கில் பின்னால் அமர்பவருக்கு தலைகவசம் வழங்கினர்



ராயபுரம்,ஜூன்,11

சென்னை ராயபுரம் போக்குவரத்து காவலர்கள் சார்பாக வட சென்னை போக்குவரத்து துணை ஆணையாளர் சரவணன் ஆணைகினங்க, போக்குவத்து காவல் ஆய்வாளர் எடிசன் சாந்தகுமார் தலைமையில் சட்டம் ஒழுங்கு காவல் உதவி ஆய்வாளர் சிவா, போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் டி.மதன் முன்னிலையில் இரு சக்கரவாகனத்தில் பயணிக்கும் வாகன ஓட்டுநர் மற்றும் பின்னால் அமர்பவரும் என இருவரும் கட்டாயம் தலைக்கவசம் அணியவேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தி தலைகவசம் வழங்கினர்.

விழிப்புணர்வு நிகழ்வில் 4சக்கர வாகன ஓட்டிகள் சீட்பெல்ட் அணிவது, வாகனம் ஓட்டும் போது கைபேசி பயன்படுத்தாமல் இருப்பது, குடிபோதையில் வாகனம் ஓட்டக்கூடாது போன்ற சாலைபாதுகாப்பு விதிகளைப் பின்பற்ற வேண்டும் வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தபட்டது.மேலும் ராயபுரம் போக்குவரத்து போலிசார் வாகன தணிக்கையின்போது இதுவரை மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டிய வாகன ஓட்டிகளுக்கு 80சதவிகிதம் வழக்குபதிவு செய்யபட்டுள்ளனர் என தெரிவித்தனர். விழிப்புணர்வு நிகழ்வில் போக்குவரத்து உதவி ஆய்வாளர்கள் சக தலைமைகாவலர்கள் உடன் இருந்தனர்.

# விழுப்புரம் அருகே 2 புதுச்சேரி ரவுடிகள் வெட்டிக் கொலை போலீஸார் விசாரணை

வானூர்:ஜூன்,11

விழுப்புரம் மாவட்டம் வானூரை அடுத்த திருவக்கரை உள்ளது. இங்குள்ள மெயின்ரோட்டில்இருந்து விவசாய நிலத்திற்கு செல்லும் வழியில், ரத்த வெள்ளத்தில் 2 வாலிபர்களின் உடல் கிடந்ததை அவ்வழியே சென்ற விவசாயத் தொழிலாளர்கள் நேற்று காலை 10.30 மணியளவில் பார்த்தனர்.

இது குறித்த தகவலின் பேரில் வானூர் இன்ஸ்பெக்டர் அரிகிருஷ்ணன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். அங்கு ரத்த வெள்ளத்தில் கிடந்த 2 வாலிபர்களின் உடலை மீட்டனர். இதில் ஒரு வாலிபர் உடலில் ஒரு கையும், காலும் வெட்டப்பட்ட நிலையில் முட்புதர் அருகேகிடந்தது. மற்றொருவருக்கு தலை மற்றும் மார்பு, கழுத்தில் கத்தியால் வெட்டப்பட்டிருந்தது.

உடலை கைப்பற்றிய போலீசார் புதுவையில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். கொலை செய்யப்பட்ட வாலிபர்கள் 2 பேரும் புதுவை மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது.

இதனைத்தொடர்ந்து போலீசாரின் விசாரணையில் இறந்த வாலிபர்கள் புதுவை மாநிலம் வில்லியனூர் அடுத்த பிள்ளையார்குப்பம் பகுதியை சேர்ந்த அருண் (வயது 23), கோர்க்காடு அன்பரசன் (35) என்பது தெரியவந்தது. இந்த 2 பேரும் புதுவை மாநிலத்தில் கொலை உள்ளிட்ட பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முன்விரோதம் காரணமாக இந்த கொலை நடந்ததா? அல்லது கூட்டாளிகளே இவர்களை கொலை செய்து வீசி சென்றுள்ளனரா என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பதட்டத்தையும் பரபரப்பையும் உருவாக்கியுள்ளது.

செந்துறை அருகே நெடுஞ்சாலைத்துறை சார்பில்

# 5000 மரக்கன்றுகள் நடும் விழா : அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் துவக்கி வைத்தார்



அரியலூர், ஜூன்.11–

செந்துறை அருகே, நெடுஞ்சாலைத் துறை சார்பில், 5 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை, போக்குவரத்து துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர் துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், விழுப்பணங்குறிச்சி ஊராட்சியில், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, செந்துறை உதவி கோட்டத்தில், 5000 மரக்கன்றுகள் நடும் நிகழ்வினை, போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் துவக்கி வைத்தார், இந்நிகழ்ச்சி அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், நெடுஞ்சாலைத்துறை அரியலூர் கோட்டப் பொறியாளர் உத்தண்டி, உடையார்பாளையம் வருவாய்கோட்டாட்சியர் பரிமளம், உதவிக் கோட்டப் பொறியாளர் ராஜா, உதவி பொறியாளர் முரளிதரன், சாலை ஆய்வாளர்கள் சிவக்குமார், பாலாஜி, வட்டாட்சியர் பாக்கியம் விக்டோரியா, திமுக செந்துறை ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், எழில்மாறன் மற்றும் நெடுஞ்சாலை துறை அலுவலர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கோட்சே குறித்து சர்ச்சை பேச்சு

# மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங்கை பதவி நீக்கம் செய்ய வைகோ வலியுறுத்தல்



சென்னை, ஜூன்11–

"தேசப் பிதா மகாத்மா காந்தியைக் கொன்ற கோட்சேயைப் புகழ்ந்து பேசிய மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங் மன்னிப்பு கேட்க வேண்டும். உடனடியாக அவர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும்" என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மத்திய பாஜக அமைச்சர் கிரிராஜ் சிங் வெள்ளிக்கிழமை பிஹாரில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் பேசும்போது, “நாதுராம் கோட்சே இந்தியாவின் மரியாதைக்குரிய நபர். அவர் பாபர், அவுரங்கசீப் போன்ற முகலாயர்கள் போல் படையெடுத்து வந்தவர் அல்ல. ஆகையால் தங்களை பாபர், அவுரங்கசீப் வழித்தோன்றல்கள் என்று கூறிக் கொள்பவர்கள் நிச்சயமாக பாரத அன்னையின் மகனாக இருக்க முடியாது” என்று கூறி இருக்கிறார்.

பாஜக ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததிலிருந்தே இந்துத்துவ சனாதன சக்திகள் மகாத்மா காந்தியைக் கொன்ற கோட்சே மற்றும் கொலைக்கு உடந்தையாக இருந்த சாவர்க்கர் போன்றோரை புகழ்ந்து பேசுவது கடும் கண்டனத்துக்கு உரியது.

தேசப் பிதா மகாத்மா காந்தியைக் கொன்ற கோட்சேயைப் புகழ்ந்து பேசிய மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங் மன்னிப்பு கேட்க வேண்டும். உடனடியாக அவர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும்" என்று கூறியுள்ளார்.

முன்னதாக, கிரிராஜ் சிங் இரண்டு நாட்கள் பயணமாக பிஹார் சென்றார். கட்சி நிர்வாகிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார். இதன் ஒரு பகுதியாக வெள்ளிக்கிழமை மாலை அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய சில விஷயங்கள்தான் தற்போது சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

"நாதுராம் கோட்சே இந்தியாவின் மரியாதைக்குரிய நபர். அவர் பாபர், அவுரங்கசீப் போன்ற முகலாயர்கள் போல் படையெடுத்து வந்தவர் அல்ல. ஆகையால் தங்களை பாபர், அவுரங்கசீபின் வழித்தோன்றல்கள் என்று கூறிக் கொள்பவர்கள் நிச்சயமாக பாரத அன்னையின் மகனாக இருக்க இயலாது" என்று பேசியது கவனிக்கத்தக்கது.

சென்னை திருவொற்றியூர் மாநகராட்சி வணிக வளாகத்தில்

# எஸ்பிஐ வாடிக்கையாளர் சேவை மையத்தின் கட்டிடத்தின் சீலிங் பெயர்ந்து விழுந்தது



திருவெற்றியூர்,ஜூன்.11

திருவெற்றியூர் எல்லையம்மன் கோவிலில் அருகே உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிகவளாகம் உள்ளது. இங்கு வட்டாட்சியர் அலுவலகம் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா வங்கி, வடசென்னை பல் மருத்துவ மனை, எஸ் பி ஐ வாடிக்கையாளர் சேவை மையம் உள்ளது

இங்கு தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர். எஸ் பி ஐ வாடிக்கையாளர் சேவை மையத்தில் வழக்கம்போல் பணியை முடித்து விட்டு ஊழியர்கள் நேற்று முன் தினம் மாலை ஷட்டர் கதவை பூட்டி சென்றுள்ளனர்

நேற்று முன்தினம்இரவு எஸ்பிஐ வாடிக்கையாளர் சேவை மையத்தில் அதிக சத்தத்துடன் உல் சீலிங் கலவை பெயர்ந்து விழுந்துள்ளது . நேற்று காலை ஷட்டர் கதவை திறந்து பார்த்த ஊழியர் உல் சீலிங் கலவை விழுந்து இருப்பதை பார்த்த அவர்கள் இது குறித்து உடனடியாக திருவொற்றியூர் மாநகராட்சி அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்

தகவலறிந்து விரைந்து வந்த மாநகராட்சி அதிகாரிகள் உல் சீலிங் கலவை விழுந்த இடத்தை பார்த்து சென்றனர். வேலை ஆட்கள் இருக்கும் போது நடந்து இருந்தால் யாருக்காவது காயம் ஏற்பட்டு இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி இறுதி ஆண்டு மாணவர் மர்ம மரணம்



சென்னை,ஜூன் 11

கேரளா மாநிலத்தை சேர்ந்த 24 வயதுடைய தனுஷ் 2017 ஆண்டு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் எம்பிபிஎஸ் சேர்ந்து தற்போது ஐந்து ஆண்டு படித்து வருகிறார்.

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி விடுதியில் தங்கி இருந்த தனுஷ் நேற்று முன் தினம் காலை திடீரென ஒன்பதரை மணியளவில் மயக்கம் அடைந்து கீழே விழுந்துள்ளார். அவரது நண்பர் ஆதித்யா அவரை உடனே ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார் அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று நண்பகல் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் அவர் இறப்பிற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை இது குறித்து வெளிநாட்டில் உள்ள அவரது குடும்பத்தினருக்குதகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடற்கூறாய்வுக்கு பின்பு அவரது மரணம் குறித்த விபரம் தெரியும் என மருத்துமனை முதல்வர் தெரிவித்துள்ளார் . மருத்துவ கல்லூரி மாணவர் திடீரென மர்மமாக மரணம் அடைந்தது குறித்து ஏழு கிணறு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்

பாகல்மேடு ஸ்ரீ வரசக்தி விநாயகர் கோயில் அறக்கட்டளையின் சார்பில்

# பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, ஜூன்11–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பாகல்மேடு ஊராட்சியில் இயங்கி வரும் ஸ்ரீ வரசக்தி விநாயகர் கோயில் அறக்கட்டளையின் சார்பில் அரசுபள்ளிகளில் பயிலும் மாணவ–மாணவியர்களுக்கு பேனா,பென்சில்,ஸ்கேல், நோட்டு உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் அடங்கிய தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி பாகல்மேடு காமராஜர் திருமண மண்டபத்தில் நேற்று காலை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, ஸ்ரீ வரசக்தி விநாயகர் கோயில்அறக்கட்டளை நிறுவனர் கண்ணன் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில்,125 அரசு பள்ளி மாணவ மாணவியருக்கு ஒரு வருடத்திற்கு தேவையான நோட்டு-புத்தகங்கள், பேனா உள்ளிட்டவை அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது.

இதில், சிறப்பு அழைப்பாளர்களாக ரோட்டரி கிளப் ஆஃப் சென்னை போர்ட் சிட்டி நிர்வாகிகள், முத்துசாமி, ராஜசேகர், சந்திரசேகர், ஸ்ரீராம்நாகராஜ் மற்றும் பாகல்மேடு ஊராட்சி மன்ற தலைவர் தேவகிதங்கப்பிரகாசம், மாம்பள்ளம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கனகலஷ்மிசங்கர், பேரிட்டிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் வழக்கறிஞர் தில்லைகுமார், ஊராட்சி மன்ற செயலர்கள் உமாபதி, தனசேகரன், குட்டி மற்றும் முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில், ஸ்ரீ வரசக்தி விநாயகர் கோயில் அறக்கட்டளை நிர்வாகி திவ்யா நன்றி கூறினார்.

# 2022–23–ல் ஜிடிபி 7.2% என்பது மகிழ்ச்சி தரும் சாதனை தலைமை பொருளாதார ஆலோசகர் ஆனந்த நாகேஸ்வரன்



கொல்கத்தா, ஜூன்11–

2022–23 நிதி ஆண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.2 சதவீதமாக இருக்கும் என்ற கணிப்பு மகிழ்ச்சி அளிக்கும் சாதனை என்று தலைமை பொருளாதார ஆலோசகர் ஆனந்த நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பாரத் வர்த்தக சபை சார்பில் கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய ஆனந்த் நாகேஸ்வரன், "2022–23–ல் நாட்டின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.2% ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இது ஜிடிபி-யின் முதல் நம்பகமான மதிப்பீடு. இத்தகைய வளர்ச்சி அரசாங்கத்துக்கும் பொருளாதாரத்துக்கும் மகிழ்ச்சியளிக்கும்சாதனை. எனது எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கை என்னவென்றால், 2022–23–ம் நிதியாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி, 2026–ம் ஆண்டு பிப்ரவரியில் இறுதி செய்யும்போது, அது 7.2 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கும்.

2021–22–ன் ஜிடிபி 9.1% ஆக மதிப்பிடப்பட்டது. 2022–23–ன் ஜிடிபி 7.2% ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய வளர்ச்சிக்கு அரசாங்கத்தைவிட, உங்களைப் போன்றவர்களின் (தொழிலதிபர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள்) முயற்சி அதிகம். நாட்டின் பொருளாதாரம், சில வெளிப்புற ஆபத்து காரணிகளை சமாளிக்கும் அளவுக்கு வலுவாக உள்ளது. ஏனெனில், குறைந்த விலையில் எண்ணெய் வாங்குகிறோம்; அதோடு, ஒட்டுமொத்த உள்நாட்டு பொருளாதாரமும் ஸ்திரத்தன்மையாக இருக்கிறது. இதனால் நாடு பயனடைந்து வருகிறது" என தெரிவித்தார்.

தேசிய புள்ளியியல் அலுவலகம் சமீபத்தில் 2022–23க்கான உண்மையான GDP வளர்ச்சி 7.2% ஆக இருக்கும் என்று மதிப்பிட்டுள்ளது என்பதும், தனியார் நுகர்வு மற்றும் தனியார் முதலீடு காரணமாக 2023–24ல் இந்தியா வேகமாக வளரும் பொருளாதாரமாக இருக்கும் என பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கண்கொடுத்த மாரியம்மன் கோயில் தீமிதி உற்சவம்



தரங்கம்பாடி, ஜூன்–11:

சங்கரன்பந்தல் கண்கொடுத்த மாரியம்மன் மாரியம்மன் கோயில் தீமிதி உற்சவம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா சங்கரன்பந்தல்–தமிழன் தெருவில் உள்ள கண்கொடுத்த மாரியம்மன் தீமிதி திருவிழா கடந்த 2–ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இக்கோயில் தீமிதி உற்சவத்தை முன்னிட்டு வெண்குளக்கரையில் இருந்து மேள வாத்தியம் முழங்க கடம் புறப்பாடு செய்யப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாக பக்தர்கள் ஊர்வலமாக வந்து கோயில் முன்பு அமைக்கப்பட்டிருந்த தீக்குண்டத்தில் கரகம் இறங்கியது அதனைத் தொடர்ந்து விரதம் இருந்த ஏராளமான பக்தர்கள் தீ மிதித்து நேர்த்திக்கடன் செலுத்தி அம்மனை தரிசனம் செய்தனர்.

தீமிதி திருவிழாவில் உள்ளூர் மட்டுமின்றி வெளியூர்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசித்தனர். விழா ஏற்பாடுகளை விழா குழுவினர் மற்றும் கிராம மக்கள் செய்திருந்தனர்.

# புதுக்கோட்டை கலெக்டரை கண்டித்து இந்து முன்னணி சார்பில் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு எதிரொலி மாதர் சங்கம் கண்டனம்






புதுக்கோட்டை ,ஜூன்.11-

புதுக்கோட்டை கலெக்டரை கண்டித்து இந்து முன்னணி சார்பில் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் சூழலில் ஆணாதிக்க கண்ணோட்டத்துடன் பெண் ஆட்சியரை அவதூறு செய்வதா என்று கூறி மாதர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் இல்லத்தில் இருந்த விநாயகரை சிலையை புதிதாக பதவி ஏற்று கொண்ட கலெக்டர் மெர்சி ரம்யா தன் மதம் சார்ந்து செயல்பட்டதாகவும். அவர் தொடர்ந்து கலெக்டராக இருந்தால் ஒரு தலைப்பட்சமான நடவடிக்கையில் ஈடுபடுவாரோ என சந்தேகம் மக்களின் மனதில் ஏற்பட்டுள்ளது எனவே அவரை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என வலியுறுத்தி ஜூன் 12-ம் தேதி திங்கள் கிழமை மாலை 4 மணிக்கு ஆர்ப்பாட்டம்நடைபெற இருப்பதாகவும் அனைவரும் வாரீர் என்று இந்து முன்னணி சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆணாதிக்கக் கண்ணோட்டத்துடன் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரை அவதூறு செய்யும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

இது தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் சங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்ட மனுவில் தெரிவித்திருப்பதாவது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் முகாம் அலுவலக வளாகத்தில் இருந்த விநாயகர் சிலை அகற்றப்பட்டுள்ளதாக சிலர் சமூக ஊடகங்களில் சிலதினங்களுக்குமுன்பாக பரப்பிவிட்டனர். இதனையடுத்து சில மத அடிப்படைவாதிகள் மாவட்ட ஆட்சியர் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் சிலையை அகற்றிவிட்டதாக அவதூறு பரப்பினர். இதனையடுத்து சிலை அகற்றப்படவில்லை என்றும், இந்த தவறான தகவலை யாரும் நம்ப வேண்டாம் என்றும் மாவட்ட ஆட்சியர் உரிய விளக்கம் அளித்துவிட்டார்.

ஆனாலும், சிலர் இதை அரசியல் ஆதாயம் தேடும் நோக்கிலும், மதக் கலவரத்தை தூண்டும் வகையிலும் மாவட்ட ஆட்சியர் மீது தொடர்ந்து அவதூறு பரப்பி வருகின்றனர். நடக்காதஒருசம்பவத்தை நடந்ததாக தொடர்ந்து வதந்தியைப் பரப்பி வரும் சமூக விரோதிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.மேலும், மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யாவை மாவட்டச் செயலாளர் சுசிலா, தலைவர் பாண்டிச்செல்வி, துணைத்தலைவர்சலோமி ஆகியோர் சந்தித்து தங்களது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இப்படியேதான் வேங்கைவயல் பிரச்சனையும் மெல்ல மெல்ல ஒரு சேர எழுந்து முதலமைச்சர் சட்ட சபையில் குரல் கொடுக்கும் அளவிற்கும் நீதிமன்றம் ஓய்வு பெற்ற நீதிபதியை விசாரணைக்குஅனுப்பும் அளவிற்கு நிலைமை உருவாகியும் இன்று வரை பிரச்சனைக்கு தீர்வுஎட்டப்படவில்லை தண்ணீர்தொட்டி சாதி பிரச்சனை. விநாயகர் மதப்பிரச்சினை என்பது தனி கதை.

# 9 ஆண்டு கால மோடி ஆட்சியில் ரூ.100 லட்சம் கோடி கடன்

## காங்கிரஸ் குற்றச்சாட்டு



புதுடெல்லி ,ஜூன்.11-

கடந்த 9 ஆண்டுகளில் நரேந்திர மோடி தலைமையிலான அரசு ரூ.100 லட்சம் கோடி கடன் வாங்கி உள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ள காங்கிரஸ் கட்சி, இது தொடர்பாக வெள்ளை அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் சுப்ரியா ஸ்ரீநதே செய்தியாளர்களிடம் கூறியது: "பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு கடந்த 9 ஆண்டுகளில் ரூ.100 லட்சம் கோடி கடன் வாங்கி உள்ளது. மோடி பதவியேற்பதற்கு முன் நாட்டின் கடன் ரூ.55 லட்சம் கோடியாக இருந்தது.

அதாவது, நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து பிரதமராக பதவி வகித்த 14 பிரதமர்கள் வாங்கிய மொத்த கடன் ரூ.55 லட்சம் கோடி. ஆனால், நரேந்திர மோடி பிரதமரான பிறகு அவரது ஆட்சிக்காலத்தில் மட்டும் ரூ.100 லட்சம் கோடி கடன் வாங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நாட்டின் கடன் ரூ.155 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

மோடி அரசு நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் பாதையை சீரழித்துவிட்டது. இதன் காரணமாக மிகப் பெரிய அளவில் வேலையின்மை உருவாகி இருக்கிறது; பணவீக்கம் அதிகரித்திருக்கிறது. ரூ.100 லட்சம் கோடி கடன் என்பது ஆபத்தான அளவு. நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவு நாட்டிற்கு கடன் சுமையை மோடி அரசு ஏற்படுத்தி இருக்கிறது.

பொருளாதார மேலாண்மை என்பது ஊடகமேலாண்மையைப் போன்றது கிடையாது. நரேந்திர மோடி அரசு ஊடகங்களை திறமையாகக் கையாண்டு பொய்களை உரக்கச் சொல்லி வருகிறது.

வாட்ஸ்அப் மூலம் பரப்பி வருகிறது. தனது அரசியல் எதிரிகளை திறமையற்றவர்கள், ஊழல்வாதிகள் என்றெல்லாம் விமர்சித்தவர் நரேந்திர மோடி. இந்த வார்த்தைகள் தற்போது வேறு யாரையும்விட அவருக்கும் அவரது அரசுக்குமே பொருத்தமாகி இருக்கிறது.

நாட்டின் பொருளாதார நிலை குறித்து மத்திய அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். ஏனெனில், இவ்விஷயத்தில் நடந்துள்ள தவறுகள் இன்னும் ஆழமானவை" என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் சுப்ரியா ஸ்ரீநதே தெரிவித்துள்ளார்.

# கடையநல்லூரில் பொதுமக்களின் 15ஆண்டு கால கோரிக்கை நிறை வேற்றம்

## ரேசன் கடை அமைக்க எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டினார்



தென்காசி,ஜூன்.11-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சி 3வது வார்டு பொதுமக்களின் 15ஆண்டு கால கோரிக்கையை நிறை வேற்றும் விதமாக கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்ட 3வது வார்டு (பழையவார்டு எண்33) அங்கு சுமார் 904ரேசன்கார்டுகள் உள்ளது அவர்கள் சுமார் 2கிலோமீட்டர் நடந்து சென்று பொருட்கள் வாங்கிவந்தனர் பொதுமக்களின் சிரமத்தை போக்க கடந்த 2012ம் ஆண்டு அப்போதய கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த அமைச்சர் செந்தூர்பாண்டியன் நிதி ஒதுக்கீடு செய்தார், இடப்பிரச்சினை காரணமாக நடைபெறாமல் போனது அதற்கு பின்பு தற்போது 3வதுவார்டு கவுன்சிலர் சுபா ராஜேந்திரபிரசாத் எம்.எல்.ஏவிடம் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கோரிக்கை வைத்தார்.

அதைஏற்றுக்கொண்டு தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமுரளி குட்டியப்பா எம்எல்ஏ - விடம் ரூ8•10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்தார், தந்தை எம்.எல்.ஏவாக இருக்கும் போது தடைபட்ட காரியம் மகன் எம்.எல்.ஏவாக இருக்கும்போது நடக்கும் விதமாக நேற்று 3வது வார்டில் எம்.எல். ஏவால் அடிக்கல் நாட்டப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் பொய்கைமாரியப்பன், பொருளாளர் சண்முகையா, அவைத்தலைவர் வி.பி. மூர்த்தி நகரகழகசெயலாளர் எம்.கே.முருகன், நகர எம்.ஜி.ஆர் மன்ற இணைச் செயலாளர் முன்னாள் கவுன்சிலர் முத்துகிருஷ்ணன், சவுதி அரேபியா அம்மா பேரவை செயலாளரும்,மாவட்ட வர்த்தக அணி பொருளாளர் எஸ். எம் மைதீன் , மாவட்ட மாணவரணி துணை செயலாளர் கருப்பையாதாஸ், மாவட்ட இளைஞரணிதுணைத் தலைவர் ஜெயமாலன், நகர இளைஞரணி செயலாளர் ராஜேந்திரபிரசாத், நகர ஐடி விங் துணை செயலாளர் மாரியப்பன் , மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற நிர்வாகிகள் புகழேந்தி, கமாலுதின் , தியாகராஜன் , அரவிந்த், வார்டு செயலாளர்கள் இசக்கி, குமார்,வெங்கட் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



ஆவுடையார்கோவில் தாலுகா மீமிசல் காவல் நிலைய சிறப்புஉதவி ஆய்வாளர் காளிமுத்து மற்றும் காவல் துறையினர் கிழக்கு கடற்கரை சாலையில் ஹெல்மெட் அணியாமல் வரும் நபர்களையும் வாகன ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வரும் நபர்களையும் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து அவர்களை அனுப்பி வைத்தனர்.கிழக்கு கடற்கரை சாலை எப்பொழுதும் பரபரப்பாக உள்ள சாலை இந்த வழியே கடத்தல் செய்பவர்கள், கஞ்சா கடத்துபவர்கள், போலி மதுபானம் உள்ளிட்ட கடத்தல் காரர்கள் அடிக்கடி வர வாய்ப்புள்ளதால் அவர்களை பிடிப்பதற்காகவும் கடத்தல்செயல்களை குறைப்பதற்காகவும்லைசன்ஸ் இல்லாமலும் இன்சூரன்ஸ் ஹெல்மெட்அணியாமல் ஓவர் ஸ்பீடு செல்கின்றவர்களை பிடிப்பதற்காகவும் இந்த ஆய்வில் ஈடுபட்டிருப்பது சிறப்புக்குறியது.



மதுரை திட்டக்குழு உறுப்பினர் பதவிக்கான விண்ணப்ப மனுவை வழங்க டி.ஆர்.ஓ விடம் கவுன்சிலர்கள் சுதன், அமுதா, சரஸ்வதி ,பொன்வளவன் ஆகியோர் கலெக்டர் அலுவலகம் வந்தனர். உடன் நகர அமைப்பு குழுத் தலைவர் மூவேந்திரன் ,69 ஆவது வார்டு இளைஞரணி அமைப்பாளர் மணிகண்டன். தவமணி திமுக 69 ஆவது வார்டு வட்டக் கழக செயலாளர் செந்தில் ஆகியோர் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் பெரிய பள்ளிவாசல் முன்பாக மணிக்கூண்டு அருகே சிறுபான்மையினர் ஆணைய தலைவர், காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர் எஸ். பீட்டர் அல்போன்ஸ் பிறந்த நாள் நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சியில் கடையநல்லூர் நகர காங்கிரஸ் தலைவர் எம். முகம்மது அபுதாஹிர், மாவட்டத் துணைத் தலைவர்கள் எஸ். எம்.எ ஷர்புதீன்,பி. சமுத்திரம், மாவட்ட அமைப்பு செயலாளர் எஸ். எம். மஸ்தான், மாவட்ட பொதுச் செயலாளர் வி. மாடசாமி, மாவட்ட இலக்கிய அணி எஸ். ஆர். எஸ். ரமேஷ், தகவல் தொடர்பு செல்வகுமார், இலக்கிய அணி நாராயணன், நகரத் துணைத் தலைவர் எம். எம். அபூபக்கர், நகரச் செயலாளர் தியாகராஜன், எம் ஏ துராப்ஷா எம். எம். முகமது ரபி, இந்தி சேகுதுமான், சித்தி, யூசுப், ஷபீர், அபுபக்கர் சித்திக், பீர்முகமது, முகமது நபீம் ,இர்பான் அமீலுல் அஸ்லாம், முகமது அசிஸ், மற்றும் மாணவர்கள், இளைஞர்கள் 20க்கும் மேற்பட்டோர் காங்கிரஸில் தன்னை இணைத்துக் கொண்டனர் நிகழ்ச்சியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

# மணமேல்குடியில் இருந்து ஆவுடையார்கோவில் நோக்கி சென்ற அரசு பேருந்து கவிழ்ந்து பயணிகள் படுகாயம்



ஆவுடையார்கோவில், ஜூன்.11-

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடியில் இருந்து பாப்பனூர் வழியாக ஆவுடையார் கோவிலுக்கு தினம்தோறும் சென்று வருகின்ற அரசு பேருந்து விச்சூரைத் தாண்டி மேல பாப்புனூர் என்ற கிராமத்தில் சென்று கொண்டிருந்த பொழுது, பத்திற்கும் மேற்பட்ட மாடுகள் சாலையை கடக்க முயன்றன.

அப்பொழுது சுமார் 20 வருடம் பழமை வாய்ந்த பேருந்தாக இருந்த காரணத்தினால் பிரேக் பிடிக்காமல் கட்டுப்பாட்டை இழந்து சாலை ஓரமாக இருக்கின்ற வாரிக்குள் கவிழ்ந்ததாகவும் இந்த விபத்தில்நான்குபெண்கள் இரண்டு சிறுவர்கள் உட்பட ஓட்டுநர் மற்றும் நடத்துனர் ஆகியோர்கள் காயத்துடன் ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு சென்று மணமேல்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இந்த பேருந்து விபத்துக்கு காரணம் நீண்ட காலமாக ஒரே பேருந்தை பராமரிப்பு இல்லாமல் பயன்படுத்தியதுதான் என கூறப்படுகிறது.

## புளியங்குடியில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு

# வேலை வாய்ப்பு உதவித்தொகை பெறுவதற்கான சிறப்பு முகாம்



தென்காசி,ஜூன்.11-

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்குவேலை வாய்ப்பு உதவித்தொகை பெறுவதற்கான சிறப்பு முகாம் திருஞானசம்பந்தர் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது.இம்முகாம் ஒருங்கிணைப்பு மருதம் மாடசாமி கலைவாணி தொண்டு அறக்கட்டளை மற்றும் தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் எஸ். ஆர். ரம்யா இணைந்து நடத்தும் முகாமில் தலைமை இந்துமதி, வரவேற்புரை கற்பகராஜா, சிறப்புரை எஸ்.ஆர். ரம்யா, நன்றியுரை மு.சுரேஷ்குமார்,மேலும் முகாமில் படித்த வேலையற்ற இளைஞர்கள், பெண்கள் என 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் 243 பேருக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பணி ஆணை வழங்கப்பட்டது. மற்றும் பட்டதாரி உதவித்தொகை தகுதி வாய்ந்த 72 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டது, வேலைவாய்ப்பு அலுவலகத்தினரால் வேலைவாய்ப்பு பதிவு செய்தல், எம்பிளாய்மெண்ட் ரினிவல் இவை அனைத்தும் மாடசாமி கலைவாணி அறக்கட்டளை மற்றும் மருதம் பயிற்சி மைய பயிற்றுநர்கள் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டது.

# நேயம் முதியோர் இல்லத்தில் இலவச பிசியோ தெரபி மருத்துவ முகாம்



ஆலங்குடி ,ஜூன்.11-

ஆலங்குடியில் இயங்கி வரும் நேயம் முதியோர் இல்லத்தில் பீனிக்ஸ் பிசியோதெரபி மையம் சார்பாக இலவச மருத்துவமுகாம் நடைபெற்றது.

நிறுவன இயக்குநர் மார்ட்டின் வரவேற்றார். நிகழ்வினை மேலாளர் குமார் தொகுத்து வழங்க பட்டதாரி ஆசிரியர் திருமுருகன் கலந்து கொண்டு முதியோர் மனம் மகிழும் வகையில் நாட்டுப்புற பாடல் பாடினார். இயன்முறை மருத்துவர் கோவிந்தசாமி பேசுகையில்:- முதியோர்களாகிய உங்கள் உடல் வலியை சரிசெய்து விடலாம். ஆனால் மன வலியை போக்குதல் நம் மனதை வைத்துக்கொள்ளும் முறையிலேயே உள்ளது. இதயம் தாமரை மொட்டைபோன்று உள்ளது.

அதனை கவலைகள் மனஅழுத்தங்கள் வாடிவிட செய்கின்றன.நீங்கள் உங்கள் உள்ளங்களை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள கடந்த காலத்து கவலை மறந்து எதிர்கால ஏக்கம் துறந்து நிகழ்காலத்தை நிம்மதியோடு அமைத்துக் கொள்ள வேண்டும் என்றார். மையத்தில் உள்ள முதியோர்களுக்கு இலவச மூலிகை தைலமசாஜ் மற்றும் இலவசமாக மூலிகை தைலம் மூட்டு மற்றும் முதுகு வலிக்கு வழங்கப்பட்டது. முதியோர்கள் இந்த மருத்துவ முகாம் உடம்பு மட்டுமின்றி மனதையும் மகிழ்ச்சியாக்கியது என்றனர். முகாமிற்கு உதவிகளை மகேஸ்வரி மற்றும் தேவஸ்ரீ போன்றோர் செய்து இருந்தனர்.

# தென்காசியில் புதிய சிமெண்ட் சாலை ரூ.17.48 லட்சம் மதிப்பீட்டில் நிறைவு பெற்று திறப்பு விழா நடைபெற்றது



தென்காசி,ஜூன்.11-

தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கோவிந்தபேரி ஊராட்சி நடுத்தெருவில் புதிய சிமெண்ட் சாலை அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் ரூபாய் 17.48 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை நிறைவு பெற்று திறப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தலைமையேற்று திறந்து வைத்தார் ஊராட்சி மன்றத் தலைவர் டி.கே. பாண்டியன் மற்றும் நிகழ்வில் துணைத் தலைவர்எஸ். இசேந்திரன், வார்டு உறுப்பினர்கள் இளவரசி பார்த்திப கண்ணன், பொன்னுத்தாய், முருகன்,பூலோகபாண்டியன் பணிநிறைவுஆசிரியர், மாணிக்கம், மக்கள் நலபணியாளர்கிருஷ்ணன்,மாரித்துரை,குமார்,தங்கச்சாமிபாண்டியன்வெள்ளத்துரைபாண்டியன்,சுப்பையா பாண்டியன்,என்.எஸ். மணியன், காளிமுத்து, கணேசன்,முப்பிடாதி,சுப்ரிசாமுவேல்,அந்தோணி பிரியா, அன்னம்மாள், செல்வி, தேன்மொழி, இசக்கியம்மாள், ஊராட்சி செயலர் மூக்காண்டி, தூய்மை பணியாளர்கள் லட்சுமி, சத்யா ,சாமியாடியான், ஊர் பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# பல்கலைக்கழக துணைவேந்தர் நியமன நடைமுறைக்கு கால நிர்ணயம்

# 9 ஆண்டுகால பாஜக ஆட்சியில் 100 லட்சம் கோடி கடன் காங்கிரஸ் குற்றச்சாட்டு





# கலெக்டரை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த இந்து முன்னணி முடிவு : மாதர் சங்கம் எதிர்ப்பு


சென்னை / புதுக்கோட்டை | 11.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

11.06.2023 ஞாயிறு

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ராம் பிரசாத் பிசுமில் , இந்திய செயற்பாட்டாளர் (பி.1897) (இ.1927)



லாலு பிரசாத் யாதவ் , பீகாரின் 20வது முதலமைச்சர் (பி.1947)



மித்திர வெத்தமுனி , இலங்கைத் துடுப்பாட்ட வீரர் (பி.1951) (இ.2019)



சவிதா புனியா , இந்திய மகளிர் வளைதடிபந்தாட்ட வீராங்கனை (பி.1990)



## இன்றைய நினைவு நாள்

கன்சியாம் தாசு பிர்லா , இந்தியத் தொழிலதிபர், அரசியல்வாதி (பி.1894) (இ.1983)



பாவலரேறு பெருஞ்சித்திரனார் , தமிழறிஞர் (பி.1933) (இ.1995)



வித்தியா சரண் சுக்லா , இந்திய அரசியல்வாதி (பி.1929) (இ.2013)

